கட்டுரை 05 · ARTICLE 05 | தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அற இலக்கியமும்

# அகப்பொருள் மரபில் பெண்ணின் உடல்மொழி: குறுந்தொகையை முன்வைத்து

*The Body Language of Women in the Akam Tradition: With Reference to Kuruntokai*

**முனைவர் சு. தமிழரசி**

உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் உயராய்வு மையம்
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), பழனி

***Dr. S. Tamilarasi**, Assistant Professor, PG and Research Centre of Tamil, Arulmigu Palaniandavar Arts College for Women (Autonomous), Palani*

**பக்கங்கள்:** 30–34

### ஆய்வுச் சுருக்கம்

தகவல் தொடர்பு (communication) என்பது ஒருவர் தன்னுடைய எண்ணங்களையும் நோக்கங்களையும் மற்றொருவருக்குத் தெரிவிப்பது. தகவல் பரிமாற்றம் மனித குலம் தோன்றியது முதலில் இருந்து வந்துள்ளது. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் தகவல் பரிமாற்றமும் ஒன்றாகும். மனித சமூகத்தின் வளர்ச்சியில் தகவல் தொடர்பும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தகைய தகவல் தொடர்பு பேச்சு மொழி வழி மட்டுமே நடப்பதில்லை. வார்த்தைகளற்ற உடல் மொழி (Body language) வழியாகவும் நடைபெறுகிறது. இதனை குறுந்தொகை எவ்வாறு பதிவு செய்துள்ளன என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** அகப்பொருள் மரபு; மெய்ப்பாடுகள்; நாண உணர்வு; கண் பணித்தல்; பேச்சு மொழி வழி தகவல் தொடர்பு; பேச்சு மொழியற்ற தகவல் தொடர்பு; கண்ணின் மொழி; உடல் அசைவ மொழிகள்; தோள் நெகிழுதல்; பசலை படர்தல்

### Abstract

Communication is the act by which a person conveys his or her thoughts and intentions to another. The exchange of information has existed since the very emergence of humankind and is one of the basic human needs, and communication plays a vital role in the development of human society. Such communication does not take place through spoken language alone; it also takes place through wordless body language. The aim of this article is to examine how Kuruntokai records this form of communication.

**Keywords:** Akam tradition; meyppāṭu (expressions of emotion); bashfulness; tearful eyes; verbal communication; non-verbal communication; language of the eyes; body-movement language; loosening of the shoulders; spreading pallor (pasalai)

## முன்னுரை

தகவல் தொடர்பினை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. பேச்சு மொழி வழித் தகவல் தொடர்பு (verbal communication)
2. பேச்சு மொழி அற்ற தகவல் தொடர்பு ( Nonverbal communication)

பேச்சு மொழியற்ற தகவல் தொடர்பு முறைகளில் உடல் மொழி ஒன்றாகும். தமிழ் இலக்கியங்கள் உடல் மொழியை பதிவு செய்துள்ளன. அவற்றுள் அகப்பாடல் மரபில் பெண்ணின் உடல் மொழி வழித் தகவல் பரிமாற்றம் எவ்வாறு நடைபெற்றது என்பதை உற்று நோக்க வேண்டியுள்ளது.

## உடல்மொழி

தமிழ் இலக்கண மரபு உடல் மொழியினை மெய்ப்பாடு என்கிறது. தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் இதனை விரிவாக விளக்குகிறார். மக்களது அகம் மற்றும் புற வாழ்க்கையில் உலகியல் வழக்கில் தோன்றும் இம்மெய்ப்பாடுகளை இலக்கியத்திற்குரிய உறுப்புகளில் ஒன்றாக குறிப்பிடுகிறார்.

“மெய்ப்பாடு என்பது உலகத்தார் உள்ளத்து நிகழும் உணர்ச்சிகளை புறத்தாருக்கு உடலின் கண் புலப்படுத்தும் வேறுபாடுகளால் எடுத்துரைத்து பொருளைப் புலப்படச் செய்வது” என்கிறது தமிழ் இலக்கணப் பேரகராதி. (தமிழ் இலக்கணப் பேரகராதி ப.111)

“உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தாருக்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்” என்கிறார் பேராசிரியர்.

(தொல்காப்பியம், பொருள், - 247)

“பேச்சு வடிவிலோ எழுத்து வடிவிலோ அமையாமல் உடல் உறுப்புகள் அசையும் செயல்படும் வகையிலும் ஓர் உடலுக்கும் இன்னொரு உடலுக்கும் இடையே இருக்கும் இடைவெளி நெருக்கத்திலும் முகணர்ச்சி வெளிபாடுகளிலும் கை அசைவுகளிலும் சைகைகளிலும் உடல் மொழி வெளிப்படுகிறது” (மா.சு. திருமலை, தமிழ் நாவல்களில் உடல் மொழி, ப. 1)

தமிழ் அகப்பொருள் மரபில் பெண்ணின் மன உணர்வுகள் உடல்மொழி வழி எவ்வாறு இலக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உற்று நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அகப்பொருள் மரபில் குறிப்பாக தலைவியின் மன உணர்வுகளும் காதலும் அவளது வாய் மொழியை விட உடல் மொழியின் மூலமே அதிகம் வெளிப்படுத்தப்படுகின்றன. தலைவியின் காதல், பிரிவுத்துயர், நாணம் மற்றும் ஏக்கம் ஆகியவை அவளது கண்கள், நெற்றி, தோள்கள் மற்றும் செயல்பாடுகளின் வழி எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதை சங்கப் பாடல்கள் மூலம் நாம் அறியலாம்.

## கண்கள் பேசும் மொழி

உடல் மொழியை பயன்படுத்துவதற்குரிய முக்கிய கருவிகளில் கண்களும் ஒன்று. கண்ணின் வழி நாம் உடல் மொழியை பேசுகிறோம். உடல் மொழியை புரிந்து கொள்கிறோம்.

இலக்கியங்கள் உணர்ச்சியினை கண்களின் வழி காண்பிக்கின்றன. கண்கள் செய்தியை மறைப்பதற்கும், மாற்றி திசை திருப்புவதற்கும் இலக்கிய ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகின்றன. கண்களின் வழியாக கவலை, கரிசனம், ஏமாற்றம், அன்பு, வீரம், அச்சம், சூழ்ச்சி ஆகியவை வெளிப்படும்.

அகப்பாடல் மரபில் தலைவி தலைவன் முன்னிலையில் தன் காதலை நேரடியாக சொல்லாமல் கண்களின் அசைவாலேயே உணர்த்துவாள். தலைவன் தன்னை நோக்கும்போது அவனை கூர்ந்து நோக்காமல் நிலத்தை பார்ப்பதும் தன் கால் கட்டை விரலால் தரையை கீறுவதும் ஆடையின் நுனியை விரல்களால் திருகுவதும் தலைவியின் நாண உணர்வை வெளிப்படுத்தும் உடல் மொழிகளாகும்.

"நோகோ யானே நோதகைக் கிளவி”

(குறுந்தொகை - 164)

“உள்ளினன் அல்லனோ யானே
உள்ளுதொறும் நகுவதோழி நயந்தோர்
கண் கண்டன்ன நெஞ்சினென் யானே”

( குறுந்தொகை - 244)

என்னும் குறுந்தொகைப் பாடலில் தலைவனைப் பற்றிய நினைவுகள் வரும்போது எல்லாம் தலைவியின் முகம் மலர்கிறது. அவளது கண்கள் காதலனை நேரில் கண்டது போன்ற ஒரு பிரகாசத்தையும் பேரானந்தத்தையும் வெளிப்படுத்துகின்றன என்று தோழியிடம் கூறுகிறாள்.

தலைவன் அருகில் இருக்கும் போது அவனையே உற்று நோக்க நாணம் தடுக்கிறது. இதனால் தலைவி நேராக பார்க்காமல் தன் கடைக் கண்களால் அவனைக் கள்ளத்தனமாகப் பார்த்து தன் காதலை தெரிவிக்கிறாள். சமூகம் அவளது வாய் மொழிக்கு இட்ட கட்டுப்பாட்டினை அவளது கடைக்கண் பார்வை உடைக்கிறது.

தலைவன் பொருள் ஈட்டவோ அல்லது போருக்கோ பிரிந்து செல்லும்போது தலைவி அடையும் ஏமாற்றமும் சோகமும் முதன் முதலில் அவளது கண்களில் தான் தேங்கி வழிகின்றன.

“கண்பு துடைப்பவள் போல நெஞ்சத்து அன்பிலர் தோழி
நம் காதலோரே”

(குறுந்தொகை - 381)

நம் காதலோரே தலைவனின் பிரிவை தாங்க முடியாமல் தலைவியின் கண்கள் தொடர்ந்து நீரைச்சுறிகின்றன. ஊரார் அறிந்து கொள்வார்கள் என்ற அச்சத்தில் அழுகையை மறைக்க தன் கண்ணீரை தானே துடைத்து கொள்கிறாள். அழுகையை அடக்க முயல்வதால் அவளது கண்கள் சிவந்து சோகத்தின் உச்சத்தை காட்டுகின்றன.

“அம்மா வாழி தோழி சிறு பொன் கண்ணே”

(குறுந்தொகை - 5 )

தலைவன் பிரிந்த மாலை காலத்தில் தலைவியின் கண்கள் அழுது அழுது ஒளி இழந்து அவளது கண்கள் குளத்தில் பூத்திருக்கும் தாமரை மலர் மாலையில் சூரியன் மறைந்த உடன் கூம்புவதைப் போல சோகத்தால் சுருங்கி ஒளியிலிருந்து காணப்படுகின்றன என்பதை பாடல் எடுத்துரைக்கின்றது.

“கண்ணும் பசந்தன வாராதோரே”

(குறுந்தொகை- 290)

பொதுவாக பசலை நோய் நெற்றியில் தான் படரும். ஆனால் இப் பாடலில் தலைவியின் கண்களே பசலை நிறம் அடைந்து விட்டதாக வெள்ளிவீதியார் குறிப்பிடுகிறார். தலைவன் வரும் வழியை இமைக்காமல் பார்த்து பார்த்து அழுது அழுது அழுது அழுது கண்கள் தன் இயல்பான கருமை நிறத்தை இழந்து சோகத்தின் சாட்சியாக மாறுகின்றன.

தலைவிக்கு வார்த்தைகள் மறுக்கப்பட்ட இடத்தில் அவளது கண்ணீரும் கடைக்கண் பார்வையுமே வலிமையான உடல் மொழியாக செயல்பட்டுள்ளன.

## தோள் நெகிழுதல்

தமிழ் அகப்பொருள் மரபில், தலைவனின் பிரிவைத் தாங்க முடியாமல் தலைவி அடையும் உடல் மாற்றங்களில் மிக முக்கியமானது 'தோள் நெகிழுதல்' (தோள்கள் மெலிந்து போதல்) ஆகும். வார்த்தைகளால் தன் சோகத்தைச் சொல்ல முடியாத

தலைவியின் பிரிவுத் துயரை, அவளது மெலிந்த தோள்களும், கழன்று விழும் வளையல்களும் (வார்த்தையற்ற தகவல் தொடர்பாய் - Non-verbal Communication) சமூகத்திற்கு உணர்த்துகின்ற

தோள் நெகிழுதல் மற்றும் வளையல் கழலுதல் என்ற உடல் மொழியைத் தமிழ் இலக்கியத்தில் பதிவு செய்த மிக, முக்கிய பாடல் இதுவாகும்.

> “நெகிழ்ந்த தோளோடு நெரிந்த கூந்தல்
> எவ்வம் தீர வரின் எவ்வகை
> உவப்பக் கொலோ தோழி! நாமே."

(குறுந்தொகை - 4)

தலைவன் பிரியப் போகிறான் என்பதை அறிந்த தலைவியின் தோள்கள் மெலிந்து போகின்றன. அவளது கூந்தலும் சோகத்தால் சோர்ந்து முடிகிறது. தோழி தலைவியிடம், *"இப்போதே உனக்குத் தோள்கள் நெகிழ்ந்துவிட்டன; ஒருவேளை தலைவன் தன் பயணத்தைத் தவிர்த்துவிட்டு, உனது துன்பம் (எவ்வம்) தீரத் திரும்பி வந்தால் நாம் அவனை எவ்வாறு உபசரிப்போம்?"* என்று வினவுகிறாள்.

தலைவியின் தோள் மெலிவையும், அதனால் கைகளில் உள்ள வளையல்கள் கழன்று விழுவதையும் விவரிக்கும் மற்றொரு அழகிய பாடல்

> "அவரோ வாரார் தான்வந் தன்றே...
> பூத்த முல்லைப் பசும்புகர் வண்டுறை
> வளைநெகிழ் தோளோடு சாஅய நாமே."

(குறுந்தொகை - 21)

தலைவன் வருவதாகச் சொல்லிச் சென்ற கார்காலம் (மழைக்காலம்) வந்துவிட்டது. முல்லைப் பூக்கள் பூத்துவிட்டன. ஆனால் தலைவன் இன்னும் வரவில்லை. இதனால் தலைவியின் தோள்கள் மெலிந்துபோய், அவளது கைகளில் இருக்கும் வளையல்கள் தானாகவே கழன்று விழுகின்றன தலைவியின் இந்த உடல் நிலை, அவளது ஆழமான சோகத்தின் வெளிப்பாடாகும்.

## பசலை படர்தல்

தமிழ் அகப்பொருள் மரபில், காதலனைப் பிரிந்திருக்கும் தலைவியின் உடலில் தோன்றும் மிக முக்கியமான நிற மாற்றம் 'பசலை படர்தல்' ஆகும். இது மன வேதனையின் மிக உயர்ந்த உடல் மொழி வெளிப்பாடாகும்.

பசலை என்பது பொன்னிறமாக அல்லது மாநிறமாக இருக்கும் பெண்ணின் உடலில், பிரிவுத் துயரால் தோன்றும் ஒருவித மஞ்சள் அல்லது தேமல் போன்ற நிறமாற்றம் ஆகும்.

தலைவியின் நெற்றியில் பசலை எவ்வாறு படர்கிறது என்பதை இந்தத் தொடக்க வரிகள் மிக அழகாக விவரிக்கின்றன:

> "பசலை சான்ற காமத்தோடு,
> இவள்எனநோகோயானே-தோழி!”-

(குறுந்தொகை - 21)

"தோழியே! தலைவன் இன்னும் வரவில்லை. இதனால் இவள் பசலை நிறம் நிறைந்த காம நோயோடு வாடுகிறாளே என்று நான் மிகவும் வருந்துகிறேன்" என்று தோழி கூறுகிறாள். தலைவனின் பிரிவால் ஏற்பட்ட ஏக்கம், தலைவியின் முகம் மற்றும்

நெற்றியில் பசலையாகப் படர்ந்து அவளது துன்பத்தை வார்த்தையின்றி உடல்மொழி வழி காட்டுகிறது.

பசலை என்பது ஒரு நோய் போல உடலை எப்படிப் படர்ந்து ஆக்கிரமிக்கிறது என்பதை விளக்கும் பாடல்:

> "உள்ளிப் பின்னும் வாரார்; நன்றும்
> மறந்தனர் போலும், மறவா தோரே;
> கண்ணும் தண் பனி ததும்பின; நெற்றியும்
> பசலை பாய்ந்தது; நுதலும் சாஅய்,
> நல் மா மேனி ஒளியும் கரந்தது;
> நின் நயந்து உறைவி தொல் நலம் எவண் என..."
>
> (குறுந்தொகை – 351)

தலைவன் வராததால், தலைவியின் கண்களில் குளிர்ச்சியான கண்ணீர் ததும்புகிறது. அவளது நெற்றியில் பசலை பாய்ந்து (படர்ந்து) விட்டது. அவளது அழகிய மாநிற மேனியின் (உடலின்) இயற்கையான ஒளி மறைந்து போயிற்று. தலைவியின் இந்த உடல் மாற்றமே அவள் படும் துயரத்தின் சாட்சியாக நிற்கிறது.

சங்கச் சமூகத்தில், ஒரு பெண்ணின் முகத்தில் பசலை படர்ந்துவிட்டால், அதைச் சுற்றியுள்ளவர்கள் கவனித்துவிடுவார்கள். வார்த்தைகளால் காதலை மறைத்தாலும், உடலில் தோன்றும் பசலை அவளது ரகசியக் காதலை ஊராருக்குக் காட்டிவிடும். சில நேரங்களில், மகள் ஏன் பசலை பாய்ந்து மெலிந்து போகிறாள் என்று தெரியாமல், அவளுக்கு ஏதோ தெய்வக் குற்றம் ஏற்பட்டுவிட்டது என்று நினைத்து நற்றாய் 'வேலன் வெறியாட்டு' நடத்த முற்படுவாள். அப்போதுதான் தோழி குறுக்கிட்டு 'அறத்தொடு நின்று' உண்மை காதலை வெளிப்படுத்துவாள்.

## முடிவுரை

சங்க அகப்பாடல் மரபில் சொற்களால் சொல்ல முடியாத ஆழமான காதல் உணர்வுகளை, மிக நுட்பமாக வெளிப்படுத்தும் உன்னதக் கருவியாக 'உடல்மொழி' (Body Language) திகழ்கிறது.

குறுந்தொகை காட்டும் அகப்பொருள் மரபில், வார்த்தைகளை விடவும் 'உடல்மொழியே' காதலின் மொழியாகப் பெரும்பங்கு வகித்துள்ளது. பண்டைத் தமிழர்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் எவ்வளவு நாகரிகமும், உளவியல் முதிர்ச்சியும் கொண்டவர்களாக வாழ்ந்தனர் என்பதற்கு, இவ்வகப்பாடல்களில் பயின்று வரும் உடல்மொழிக் கூறுகளே அழியாத சான்றுகளாகும்.

## துணைநூற்பட்டியல்

1. வெள்ளைவாரணன்(உ.ஆ),தொல்காப்பியம்உரைவளம் பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1986
2. குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2019
3. தி. வே. கோபாலையர், தமிழ் இலக்கணப் பேரகராதி, தமிழ் மண் பதிப்பகம், 2005
4. மா. சு. திருமலை, தமிழ் நாவல்களில் உடல் மொழி, இந்திய மொழிகளின் நடுவன் நிறுவனம், மைசூர், 1987